அளவு அனுப்புவதாக உறுதி அளித்துள்ளார். ஆகவே ஆகஸ்ட் மாதத்திலே, நல்ல முறையில் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல், சம்பந்தப்பட்டவர்களிடம் முதலமைச்சர் கடிதம் மூலமாகவும், மற்றும் அலுவலர் மூலமாகவும் அதிக அளவு வேண்டுமென்று தொடர்பு கொண்டுள்ளார். நமக்குத் தேவை 40,000 டன்கள். ஆனால், 29,000 டன்கள்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். என்றாலும், 29,000 டன்களிலும் 5,700 டன்கள் தான் முதல் 3 மாதத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதில்கூட 1,050 டன்தான் நமக்கு வந்திருக்கிறது. எனவே, அவைகளை யெல்லாம் மனதிற்கொண்டு நல்ல முயற்சியை அரசு எடுத்துக் கொள்ளும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகஸ்டு மாதத்தில் அந்த முயற்சியால் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்று சொல்லவிரும்புகிறேன்.

திரு. ஏ. டி. குலசேகர்: பேரவைத் தலைவர் அவர்களே, சி. ஆர். தகடுகள் சிட்கோ மூலம் கிடைக்காத காரணத்தாலே, வெளி மார்க்கெட்டிலே வாங்க முடியாத காரணத்தாலே, மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம், சி. ஆர். தகடுகளைக் கடனாகக் கொடுத்து, தொழிற்சாலைகளை மீண்டும் நடத்திட ஆவன செய்ய, கடன் கொடுக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, சி. ஆர். தகடு கிடைக்கவில்லையென்பது தான் பிரச்னை, கிடைக்காத நிலையிலே கொடுக்க இயலவில்லை. அப்படியிருக்கும் போது, ஆலைகளுக்குக் கடன் கொடுக்கின்ற பிரச்னையே எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10.40]

வரவு செலவுத் திட்டம், 1980-81—வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 21—மீனளம்.

(ஆ) கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல்.

கோரிக்கை எண். 21.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரையின் மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

> "மானியக் கோரிக்கை எண் 21-மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,16,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."